வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 12.02.2026 வியாழக்கிழமை | இதழ் : 43 | பக்கங்கள் : 08

## சட்டத்தின்முன் சகலரும் சமம் என்பதை 2026 உயிர்ப்பிக்கும்!

### ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

நுவரெலியா, பெப்ரவரி 12

சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்த எந்த நாடும் அபிவிருத்தி அடைந்ததில்லை. சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. 2026ஆம் ஆண்டு என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்பதை உயிர்ப்பிக்கும் ஆண்டாக மாறும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

நேற்று புதன்கிழமை நுவரெலியாவில் நடந்த போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயல்பாடு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை

07



## குமாரபுரம் படுகொலை; 30ஆவது நினைவேந்தல்


திருகோணமலை, பெப். 12

திருகோணமலை - குமாரபுரம் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவுதினம் நினைவுகூரப்பட்டது.

திருகோணமலை - மூதூர் - கிளிவெட்டி - குமாரபுரம் பகுதியில் நேற்று புதன்கிழமை சிவில் சமூக பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பொது மக்கள், பிரதேச அரசியல்வாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில், படுகொலையானவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அவர்களுக்காக நீதியும் கோரப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாண

07



## அமரகீர்த்தி கொலை வழக்கு; 12 பேருக்கு மரண தண்டனை

கொழும்பு, பெப். 12

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள, அவரின் மெய்ப்பாதுகாவலர் ஆகியோர் கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 12 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மேல் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் கொண்ட ட்ரயல் அட்பார் நேற்று புதன்கிழமை இந்தத் தீர்ப்பை வழங்கியது.

கடந்த 2022 மே 9 ஆம் திகதி அறகலய போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறைகளின் போது, நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில்

07

## "எங்களை சந்திக்க வந்த ஒரே ஜனாதிபதி நீங்களே"

### நெகிழ்ந்த தோட்ட தொழிலாளர்கள்



நுவரெலியா, பெப். 12

"எங்களை சந்திக்க வந்த ஒரே ஜனாதிபதி நீங்கள்தான்", இவ்வாறு தம்மை தேயிலை தோட்டத்துக்கு வந்து சந்தித்த ஜனாதிபதியிடம் தொழிலாளர்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் நுவரெலியாவுக்கு சென்ற ஜனாதிபதி ஹற்றன் பிரதான வீதி நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதியில் உள்ள தோட்டப்பகுதிக்கு சென்று

07

## உண்மையான குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை

### சிறீ லங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, பெப். 12

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள, அவரின் மெய்க்காப்பாளர் படுகொலை வழக்கில் 12 இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த இளைஞர்களின் மனதில் வன்முறையைத் தூண்டி அவர்களை இந்த நிலைக்குத் தள்ளிய உண்மையான குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை - இவ்வாறு தெரிவித்துள்ளது சிறீ லங்கா பொதுஜன

07

## மாகாண சபை தேர்தலை நடத்த அரசு முயற்சிக்காது

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 12

கூட்டுறவு சங்க தேர்தல்களில் தோல்வியடைந்து வரும் அரசாங்கம் இந்நிலையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்தினால் படுதோல்வியடையும் என்பது தெரியும். அதனால், அரசாங்கம் தற்போதைக்கு மாகாண சபைகள் தேர்தலை நடத்த முயற்சிக்கப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி பாராளு மன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

07

### திருமலை புத்தர் சிலை விவகாரம்:

## 4 தேரர்கள் உட்பட 10 பேருக்கும் பிணை

திருகோணமலை, பெப். 12

திருகோணமலையில் புத்தர் சிலை விவகாரத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 4 பிக்குகள் உட்பட 10 பேரையும் பிணையில் செல்ல மேல் நீதிமன்றம் அனுமதியளித்தது.

கடந்த 2025 நவம்பர் 16 ஆம் திகதி திருகோணமலை போதிராஜ விகாரை அருகே கரையோர பாதுகாப்பு சட் டங்களை மீறி புத்தர் சிலை நிறுவப்பட்டதுடன், சட்ட விரோத கட்டுமானமும்

07



## ஒரேயொரு துப்பாக்கிச்சூட்டு சத்தம் மட்டுமே எமக்கு கேட்டது

### அல்லைப்பிட்டியில் கைதானோர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

"ஒரே ஒரு துப்பாக்கி சூட்டு சத்தம் மாத்திரமே எமக்கு கேட்டது. அதன் போதே பெறாமகன் வீதியோரமாக வாகனத்தை நிறுத்தி மயங்கி சரிந்தார். பின்னர் பொலிஸார் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எம்மை கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விட்டனர். வாகனத்தில் இருந்த சாணம் , கயிறு, வாள், வாகனத்துக்கு விழுந்த துப்பாக்கி சூடுகள் பற்றி எவையும் எமக்கு தெரியாது", - இவ்வாறு

07

## ரயில் மோதி முதியவர் பலி

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ் ராணி ரயில் மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று புதன்கிழமை மல்லாகத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காங்கேசன்துறையில் இருந்து ஓமந்தை நோக்கி பயணித்த இந்த

07

## கொல்லப்பட்டவரின் இறுதிக்கிரியை இன்று

யாழ்ப்பாணம், பெப். 12

அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் கட்டளையை மீறி வாகனத்தை செலுத்தியபோது சுட்டுக் கொல்லப்பட்ட சிறுவனின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

நேற்றுமுன்தினம் அல்லைப்பிட்டியில்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஐரோப்பிய ஒன்றிய குழுவுடன் தமிழ் அரசு கட்சியினர் சந்திப்பு

கொழும்பு, பெப். 12

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுத் தலைவர், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் ஆகியோரை இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் நேற்று புதன்கிழமை சந்தித்தனர்.

தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோரே இந்தச் சந்திப்பில் ஈடுபட்டிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும் அதற்கான புதிய சட்ட வரைவு, மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்துதல் உள்ளிட்ட பல முக்கிய அரசியல் மற்றும் சம உரிமை தொடர்பான விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# ஆவரங்கால் - தொண்டைமானாறு வீதி; மீள்நிர்மாண பணிகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 12

ஆவரங்கால் - தொண்டைமானாறு வீதி மீள்நிர்மாண பணிகள் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் வீதி கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் "மறுமலர்ச்சிக்கான பாதை" திட்டத்தின்கீழ் இந்த வீதி மீள்நிர்மாணிக்கப்படுகிறது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று அச்சுவேலி மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமானது. இதில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க பங்கேற்றிருந்தார். அவருடன், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீபவானந்தராஜா, ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். கபிலன், வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஷ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

6.03 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி 68 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மீள்நிர்மாணிக்கப்படுகிறது. 18 மாதங்களின் பின்னர் இந்த வீதி திறந்து வைக்கப்படும். (ஐ)



# ஒரு வருடத்தில் 900 சிறுவர்கள் புற்றுநோய்க்கு உள்ளாகின்றனர்

கொழும்பு, பெப். 12

நாட்டில் ஒரு வருடத்தில் 900 சிறுவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் சமூக மருத்துவ நிபுணர் மருத்துவர் சூரஜ் பெரேரா சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடத்திய சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், சிறுவர் புற்றுநோய்க்கான சிகிச்சைக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய மருந்துகளையும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தடையின்றி வழங்குவதற்காக சுகாதார அமைச்சருடன் முக்கிய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குத் தேவையான அனைத்து மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும். புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது, சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சைகளை பெறவும், சிகிச்சையின் முடிவுகளை சாதகமாக மாற்றவும் மிக முக்கியமான காரணியாக அமைகிறது என்று சுட்டிக்காட்டினார்.

பிள்ளைகளிடம் தொடர்ச்சியான அல்லது வழக்கத்திதுக்கு மாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். காலதாமதமின்றி சிகிச்சையைத் தொடங்குவது குழந்தைகளின் உயிரைக் காக்க உதவும் - என்றும் கூறினார். (ஐ)

# சமன் ஏக்கநாயக்கவின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, பெப். 12

அரச நிதியை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துத் திரும்பும் வழியில் லண்டனில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நடைபெற்ற தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டமைக்காகப் பெருமளவிலான அரச நிதியைச் செலவிட்டார் என்று கூறப்படும் விவகாரம் தொடர்பிலேயே இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளராகப் பதவி வகித்த சமன் ஏக்கநாயக்க, குறித்த தனிப்பட்ட பயணத்துக்கான நிதியை விடுவித்தபோது உரிய வெளிப்படைத்தன்மையுடன் செயல்படவில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியிருப்பதைக் கருத்தில்கொண்டு, சந்தேகநபரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் அனுமதித்தது.

# மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த சந்தேகநபர் கைது

கொழும்பு, பெப். 12

பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்து வந்த சந்தேகநபரை கொழும்பு - கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின்படி நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேகநபர் வெளிநாட்டில் உள்ள போதைப் பொருள் கடத்தல்காரரான அசித பெர்னாண்டோ" என்பவரின் சகா என விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேக நபரிடமிருந்து சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் மொறட்டுவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# திருக்கேதீச்சர ஆலய மகா சிவராத்திரி விழா தொடர்பில் முன்னாயத்த கூட்டம்

மன்னார், பெப். 12

வரலாற்று பிரசித்திபெற்றதும் பாடல் பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி விழா தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி மகா சிவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதையொட்டியே இந்தக் கலந்துரையாடல் திருக்கேதீஸ்வர ஆலய மண்டபத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஆலயத்துக்கு பல்லாயிரக்கணக்கில் வருகை தரும் பக்தர்களுக்கு வசதிகளை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது.

அவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கு, சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்கலாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபை தலைவர் சி. இராமகிருஷ்ணன், மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், திணைக்கள தலைவர்கள், இராணுவம், பொலிஸ் உயர் அதிகாரிகள், அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர். (ஐ)

# கரவெட்டியில் இரத்ததான முகாம்

வடமராட்சி, பெப். 12

மா. சீவரத்தினம், க. செல்வராசா, கி. வேலும்மயிலும் நினைவாக கரவெட்டி செஞ்சுடர் விளையாட்டு கழகம் இரத்ததான முகாமை நடத்துகிறது.

இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் செஞ்சுடர் விளையாட்டு கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்று குருதிக்கொடை செய்யுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தேசியமட்ட உதைபந்தாட்டம்:

# சமபோஷ வெற்றிக்கிண்ணம் யூனியன் கல்லூரி வசமானது!

கொழும்பு, பெப். 12

தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மகளிர் அணியை 3 - 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சமபோஷ வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மகளிர் அணி.

பாடசாலை மட்டத்திலான பெண்களுக்கான சமபோஷ வெற்றிக்கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி நேற்று புதன்கிழமை கொழும்பு குதிரை பந்தய திடல் மைதானத்தில் நடைபெற்றது.



இந்தப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரிகள் மோதின. விறுவிறுப்பாக ஆரம்பமான போட்டியில் இரு அணிகளும் சமதையாக பொருதின. இதனால், 1 - 1 என்ற கோல் கணக்கில் போட்டி நிறைவடைந்தது.

எனவே, வெற்றி தோல்வியை கணிக்க சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில், 3 - 2 என்ற கோல்கள் கணக்கில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ஐ)

# வட்டு. இன்பச்சோலை வீதி திருத்த பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 12

வட்டுக்கோட்டை - இன்பச்சோலை வீதி திருத்தப் பணிகள் நேற்று புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வீதி 45 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படவில்லை. இந்தநிலையில் இரண்டரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திருத்தப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்த நிகழ்வில், சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார், கிராம சேவகர் சிவகுமார், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் கிராம மக்கள் என பலர் பங்கேற்றனர்.

(ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
12.02.2026 வியாழன்கிழமை
விசுவாவசு வருடம், தை 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# எதிரணிகளின் தேர்தல் ஆர்வம்

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் எதிர்கட்சியினர் அவ்வப்போது பேசிவருகின்றனர். "ரில்வின் சில்வாவின் புதுடில்லி பயணத்தைத் தொடர்ந்து மாகாண சபைகள் தேர்தலை அரசாங்கம் நடத்தும் என்று எதிர்பார்ப்பதாக", ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ஹரீன் பெனான்டோ கூறுகிறார். ஏனெனில், இந்தியா அதற்கான அழுத்தத்தை ஓரளவு வழங்கியிருக்கும் என்பது அவரது எதிர்பார்ப்பு.

இதேபோன்று, "முடிந்தால் மாகாண சபைகள் தேர்தலை நடத்திக் காட்டுங்கள்", என்று சஜித் பிரேமதாஸவும் அவ்வப்போது கூறிவருகின்றார். மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும் என்பதை விடவும் தங்களுடைய அரசியல் மீளெழுச்சிக்கான வாய்ப்பாக அந்தத் தேர்தலை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எதிரணியினரின் பேராசையாக இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் மாகாண சபைகள் தேர்தலுக்கான தமிழரின் எதிர்பார்ப்பும் தென்னிலங்கை எதிர்க்கட்சிகளின் எதிர்பார்ப்பும் முற்றிலும் வேறானது.

தென்னிலங்கை எதிரணியின் கருத்துகளை அரசாங்கம் பெரிதுபடுத்தப்போவதில்லை. ஏனெனில், கடந்த காலத்தில் மாகாண சபைகள் தேர்தல் பிற்போடப்பட்டபோது, அதற்கு ஆதரவாக நின்றவர்கள்தான் தற்போது மாகாண சபைகள் தேர்தலுக்காக கண்ணீர் சிந்துபவர்களாக தங்களை காண்பித்துக் கொள்கின்றனர். அவர்கள் ஏன் இப்போது மாகாண சபைகள் தேர்தலில் ஆர்வம் காண்பிக்கின்றனர் என்பதையும் அரசாங்கம் அறியும். எனவே, தென்னிலங்கையிலுள்ளவர்கள் மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் பேசும் விடயங்கள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மாற்றப் போவதில்லை. ஆனால், தமிழ் கட்சிகள் இதனை ஒரு ஜனநாயக மீறலாக பெரியளவில் முன்னெடுக்கும்போது மட்டும்தான் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதேவேளை, புதுடில்லியும் இந்த விடயத்தில் கரிசனையை காண்பிக்க முன்வரும்.

ரில்வின் சில்வா நாடு திரும்பியவுடன் அவர் எவ்வாறான கருத்துகளை வெளிப்படுத்துகிறார் என்பதைப் பொறுத்துத்தான் புதுடில்லி எவ்வாறான கருத்துகளை வலியுறுத்தியது என்பதையும் ஒருவர் புரிந்து கொள்ள முடியும். டித்வா புயலின் தாக்கங்களின் பின்னர் உடனடியாக ஒரு தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் அரசாங்கம் இல்லை என்பதுதான் ஆட்சியாளரின் நிலைப்பாடாக இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் புதுடில்லியும் ஓர் எல்லைக்கு மேல் மாகாண சபைகள் தேர்தலுக்கான அழுத்தங்களை பிரயோகிக்கும் நிலையில் இருக்கப் போவதில்லை.

அடிப்படையான பிரச்னை வேறு. அதாவது, மாகாண சபைகள் தேர்தல் எவருக்குத் தேவையோ அவர்கள் மத்தியிலிருந்து வலுவான குரல் இல்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் கூறிய அதேவிடயங்களையே தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் இப்போதும் கூறிவருகின்றனர். தாங்கள் கூறிய விடயங்களில் ஏன் ஒரு சிறிய முன்னேற்றத்தைக்கூட காண்பிக்க முடியவில்லை என்பதற்கு அவர்களிடம் பதில் இல்லை.

புதிய அரசியல் யாப்பு ஒன்றில் மூலம் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு உறுதிப்படுத்தக்கூடிய சூழல் அப்போதும்போல் இப்போதும் இல்லை. ஏனெனில், அதற்கு ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும். பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் அறிமுகமான வேளையில் இந்தக் கரிசனையின் அடிப்படையில்தான் விடயங்கள் கையாளப்பட்டன. ஆகக்குறைந்தது பதின்மூன்றிலுள்ள விடயங்களை ஒற்றையாட்சி நீக்கப்பட்ட ஒரு விடயமாக முன்வைக்கும் சர்வஜன வாக்கெடுப்பில்கூட வெற்றிபெற முடியாது. ஏனெனில், தென்னிலங்கையின் அரசியல் அதற்கு இடமளிக்கப் போவதில்லை - இப்போது மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் பேசிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகள்கூட அப்போது தமிழர் பக்கமாக நிற்கப் போவதில்லை.

# 19 வயது பெண் மீது பாலியல் வன்கொடுமை; இலங்கை தமிழ் இளைஞர் லண்டனில் கைது!

லண்டன், பெப். 12

19 வயது இளம்பெண் ஒருவருக்கு போதைப்பொருள் கொடுத்து, அவரைப் பாலியல் வன்கொடுமை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளார்.

21 வயதான அவர், பெண்ணொருவரைப் பாலியல் வன்கொடுமை செய்தார் எனவும், பாலியல் செயல்பாட்டுக்காக அவருக்குப் போதைப்பொருள் வழங்கியதற்கும் குற்றம் சுமத்தப்பட்டார்.

அவர் மீது "கிளாஸ் ஏ" வகை போதைப்பொருள் வைத்திருந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சவுதாம்ப்டனில் வசித்து வரும் இலங்கை தமிழ் இளைஞர் தற்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் நீதிபதிகள் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

கடந்த வாரம், பொலிகோன் பகுதியில் உள்ள ஒரு முகவரியில் இளம்பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது

இது குறித்து பொலிஸ் அதிகாரி கூறுகையில்:

சவுதாம்ப்டனில் நடந்த பாலியல் வன்கொடுமை குறித்து விசாரணை நடத்தி வரும் அதிகாரிகள், ஒரு நபர் மீது குற்றம் சுமத்தியுள்ளனர். பெப்ரவரி 5, வியாழக்கிழமை அன்று சவுதாம்ப்டனின் பகுதியில் உள்ள ஒரு முகவரியில் 19 வயது இளம்பெண் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாக எங்களுக்கு முறைபாடு கிடைத்தது. பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு தற்போது பொலிஸார் தேவையான ஆதரவை வழங்கி வருகிறது-என்றார்.

(அ)

## பொலிஸ் கல்லூரியில் கத்திக்குத்து!

கொழும்பு, பெப். 12

களுத்துறை பொலிஸ் கல்லூரியில் கத்திக் குத்துக்கு இலக்காகி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை பொலிஸ் கல்லூரியில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறின்போது இந்த கத்திக்குத்து சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

## யாழ். துப்பாக்கிச் சூட்டு சம்பவம் மனித உரிமைக் குழு விசாரணை

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையிலான குழுவினர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை சம்பவ இடத்துக்கு நேரில் சென்று களநிலவரங்களை நேரில் ஆராய்ந்ததுடன், பொலிஸாரிடமும் தகவல்களை கோரி பெற்றனர்.

அதேவேளை குறித்த வாகனத்தில் பயணித்த ஏனைய இருவரிடமும், உயிரிழந்த நபரின் உறவினர்களிடமும் விசாரணைகளை முன்னெடுத்து வாக்கு மூலங்களை பெற்றுள்னர். (அ)

## அரச நிறுவனங்களின் தலைவர்கள் பணிப்பாளர் சபைகளில் மாற்றம்!

கொழும்பு, பெப். 12

பல அரச நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர் சபைகள் மற்றும் நிறுவனத் தலைவர்களை விரைவில் மாற்றுவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள இந்த மாற்றங்கள் குறித்து அரசாங்கம் தற்போது விரிவான ஆலோசனைகளை முன்னெடுத்து வருகின்றது.

அரச நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த மாற்றங்கள் மற்றும் புதிய நியமனங்கள் குறித்த விவரங்கள் மிக விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

நிர்வாகக் கட்டமைப்பை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை அமையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## குரங்குகள் தடுப்பு முகாம் மாத்தளையில்!

கொழும்பு, பெப். 12

இலங்கையில் குரங்குகளுக்கான முதலாவது தடுப்பு முகாம் மாத்தளை மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது.


மாத்தளை நகரில் பொது மக்களுக்கும், வாகன போக்குவரத்துக்கும் இடையூறாகவும் தொல்லையாகவும் அமையும் குரங்குகள் புதிய முகாமுக்கு மாற்றப்படவுள்ளன.

இந்த திட்டம் முன்னோடி நடவடிக்கையாகவும் ஆய்வு நோக்கில் அமைந்ததாகவும் கூறப்படுகிறது.

இலங்கையில் பல பகுதிகளில் விவசாயப் பொருட்களுக்கும் வீடுகளுக்கும் குரங்குகளினால் பாரிய சேதம் ஏற்படுகிறதென தெரிவிக்கப்படுகிறது.

குரங்கு தடுப்பு முகாம்கள் உலகில் பல நாடுகளில் குறிப்பாக மலேசியாவில் நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். வேலைச் சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் தாமதமாகும்.

**இடபம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. புதியவர்கள் அறிமுகமாவார்கள். உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் கை ஓங்கும்.

**கடகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்.

**சிம்மம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் ஆதாயம்உண்டு. உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று அவ்வப்போதுஆதங்கப்படுவீர்கள் முன்கோபத்தைகுறைக்கவும்.

**தனுசு**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் மோதல்கள் வரக் கூடும். விழிப்புடன் செயல்படவேண்டிய நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்களால் ஆதாயம் உண்டு. பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். புது பொறுப்பை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. புதிய பாதை தெரியும் நாள்.

# வில்பத்து பாதையை திறக்கமுடியாது!

## மன்னாரில் அமைச்சர் பிமல் திட்டவட்டம்

மன்னார், பெப். 12

மன்னாரில் இருந்து புத்தளம் செல்வதற்கான வில்பத்து வனப் பகுதியை ஒட்டியுள்ள பாதையை திறப்பதில் உள்ள சிக்கல்களை கருத்தில் கொண்டு, மாற்றுப் பாதைகள் குறித்த பரிந்துரைகளை முன்வைப்பதே தற்போதைய நோக்கம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தப் பாதைகள் திறக்கப் படாததால் மன்னார் மாவட்ட



மக்களுக்கு பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

அதே நேரத்தில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொல்லியல் சட்ட வரம்புகள் காரணமாக சில பாதைகள் திறக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்த விவகாரம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் அதிகாரிகள் மக்களின் கவலைகளை அறிந்துள்ளனர். எனினும் அதற்கான சட்டம் மற்றும் நிர்வாக வரம்புகள் உள்ளன.

இந்த நிலைமை காரணமாக, வில்பத்து வனப்பகுதியை ஒட்டியுள்ள இந்தப் பாதைக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய மாற்றுப் பாதைகள் குறித்து பரிந்துரைகளை முன்வைப்பதே எமது தற்போதைய நோக்கமாக உள்ளது.

இதற்காக சுற்றுச்சூழல் அமைச்சும் எமது அமைச்சும் இணைந்து எதிர்காலத்தில் விரிவான கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம்.

எதிர்காலத்தில் இந்த விவகாரம் தொடர்பான முடிவுகள், பொதுமக்கள் மத்தியஸ்த கலந்துரையாடல்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும்-என்றார். (அ)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் வைத்தியர் மீது தாக்குதல்

கிளிநொச்சி, பெப். 12

கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் மீது, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகிலுள்ள யாழ் - கண்டி வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாகனத்தில் வந்த இருவர், குறித்த வைத்தியரை வழிமறித்துத் தாக்குதல் மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான வைத்தியர் பலத்த காயமடைந்த நிலையில், கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# மக்களின் அடிப்படை தேவைகளை உணர்ந்து அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுகின்றது அரசு!

## வடக்கு மாகாண ஆளுநர் பாராட்டு

யாழ்ப்பாணம், பெப். 12

கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் தமது சொந்தத் தேவைகளுக்கும், அரசியல் இலாபங்களுக்காகவுமே வீதிகளை அபிவிருத்தி செய்தனர். ஆனால், தற்போதைய அரசாங்கமே மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து வீதிகள், பாலங்கள் மற்றும் இறங்குதுறைகளை அபிவிருத்தி செய்து வருகின்றது. நான் யாழ். மாவட்ட செயலராகக் கடமையாற்றிய காலத்தில் எவையெல்லாம் சாத்தியமற்ற கனவுகளாக இருந்தனவோ, அவை இன்று இக் காலப்பகுதியில் நனவாகி வருகின்றன என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் வீதிக் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் பொதுமக்களின் வரிப் பணத்தைப் பயன்படுத்திச் செயற்படுத்தப்படும் "மறுமலர்ச்சிக்கான பாதை" திட்டத்தின் கீழ், "ஆவரங்கால் - தொண்டைமானாறு வீதி" மேம்படுத்தல் மற்றும் நிர்மாணப் பணிகளின் ஆரம்ப நிகழ்வு, நேற்று புதன் கிழமை காலை அச்சுவேலி மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு கௌரவ அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பங்கேற்புடன் நடைபெற்ற இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரி நீங்கலாக சுமார் 680 மில்லியன் ரூபா மதிப்பீட்டில், 6.03 கிலோ மீற்றர் நீளத்துக்கு இவ்வீதி முழுமையாகப் புனரமைக்கப்படவுள்ளது. துரித கதியில் முன்னெடுக்கப்படவுள்ள இவ்வீதிப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, 12.05.2027 அன்று மக்கள் பாவனைக்காக மீளக் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் தனது உரையில்-

இன்று இப்பகுதி மக்களுக்கு மிக மகிழ்ச்சிக்குரிய நாள். ஆவரங்கால் - தொண்டைமானாறு வீதியைத் திருத்த வேண்டும் எனப் பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டி ருந்தாலும், நீண்ட காலமாக அது சாத்தியப்படாமலே இருந்தது. அந்தக் கனவு இப்போதைய அரசாங்கத்தின் காலத்தில் நடைமுறைக்கு வருகின்றது.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க வடக்கு மக்கள் மீது விசேட கரிசனையுடையவர். அவர் கடந்த காலத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதே, எமது மக்களின் துயரங்களை அறிந்தவர். நான் யாழ். மாவட்ட செயலராகப் பணியாற்றிய அக்காலப்பகுதியில், அவர் தனது பாராளுமன்ற உறுப்பினருக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண மக்களுக்கும் நிதி ஒதுக்கியிருந்தார். அந்தளவு தூரம் எமது மக்கள் தொடர்பில் அக்கறை கொண்டவர். எனவே, அவர் நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராக உள்ள இக்காலத்தில், எமது மாகாணத்தின் அபிவிருத்திகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். இவ்வாய்ப்பை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்-என்றார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சமய வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, வீதிப் புனரமைப்புக்கான பெயர்ப்பலகையை அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்து, நிர்மாணப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.றஜீவன், எஸ்.சிறீபவானந்த ராஜா, வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஷ், யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் குரூஸ், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்தை பாதுகாப்பது இனவாத நடவடிக்கை அல்ல!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, பெப். 12

பௌத்த தர்மம், பௌத்த சாசனம் மற்றும் மகா சங்கத்தினரைப் பாதுகாப்பது என்பது ஒருபோதும் இனவாதச் செயலாகாது என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு - நெலும் மாவத்தையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

இலங்கை நாடு பௌத்த அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒன்று எனத் தான் நம்புவதாகவும், இத்தகைய பௌத்த விழுமியங்களைக் கொண்ட ஒரு தேசத்தால் மட்டுமே நாட்டில் உள்ள அனைத்து மதங்களையும் கலாசாரங்களையும் பாதுகாக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தான் ஒரு சிங்களப் பௌத்தன் என்பதில் பெருமிதம் கொள்வதாகவும், தனது மதத்தின் மீது கொண்டுள்ள ஆழமான நம்பிக்கையே ஏனைய கலாசாரங்களை மதிக்கவும் பாதுகாக்கவும் தனக்குக் கற்றுக்கொடுப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மதத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்களால் மற்றுமொரு நபரின் மொழி, மதம் அல்லது கலாசாரத்தைப் பாதுகாக்க முடியாது எனத் தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, தற்போதைய அரசாங்கம் மகா சங்கத்தினரையோ அல்லது எதிர்க்கட்சிகளையோ ஒடுக்க நினைப்பது தவறான அணுகுமுறை என விமர்சித்தார்.

இதனிடையே, அரசாங்கம் தேர்தல்களைத் தாமதப்படுத்துவது அவர்களின் அரசியல் அச்சத்தையே பிரதிபலிக்கிறது என்றும், பொதுஜன பெரமுன எந்த நேரத்திலும் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் இதன்போது உறுதியாகத் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி நிதியம் ஊடாக வழங்கும் மருத்துவ உதவித் தொகை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 12

ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஜனாதிபதி நிதியத்தின் ஆளுநர் சபைக் கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவிக் கட்டணங்களைத் திருத்தம் செய்து அந்த உதவித் தொகையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ உதவிகளைப் பெறுவதில் உள்ள கடுமையான நிபந்தனைகளைத் தளர்த்தப்பட்டுள்ளன.

அதன்படி, பல்கலைக்கழகக் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு, ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகையை ஒரே தடவையில் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவமனைகளில் இதய சத்திர சிகிச்சை மற்றும் கண்புரை சத்திர சிகிச்சைகளுக்காகக் காணப்படும் நீண்ட வரிசைகளைக் குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக உதவி பெறுபவர்களின் விவரங்களை மாவட்ட மற்றும் பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் இணையத்தளத்தில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# விசேட தேவையுடையோருக்கு வருகின்றன 10 புதிய பஸ்கள்!

கொழும்பு, பெப். 12

"கிளீன் சிறீலங்கா" திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி, விசேட தேவையுடையவர்களுக்கான வசதிகளுடன் கூடிய, குளிரூட்டப்பட்ட தாழ்தள பேருந்து சேவையை ஒரு முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக 10 பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 15 ஆம் திகதி குறித்த பேருந்துகள் நாட்டை வந்தடையவுள்ளன.

இந்தப் பேருந்துகளை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும்த் தேவையான பௌதீக மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இயலுமை இல்லை என்பது தெரியவந்துள்ளது.

எனவே, பேருந்துப் போக்குவரத்தை நவீனமயமாக்கும் முதற்கட்டமாக, நவீன வசதிகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் கொண்ட 100 பேருந்துகளைக் கொழும்பு நகரில் சேவையில் ஈடுபடுத்தும் திட்டத்திற்காக, கடந்த வருடம் ஜூலை 21 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட லங்கா மெட்ரோ ட்ரான்சிட் (தனியார்) நிறுவனத்திடம் இந்த 10 பேருந்துகளையும் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜி.எஸ்.பி சலுகையை தக்கவைக்க இலங்கை அரசு கடும் பிரயத்தனம்

கொழும்பு, பெப். 12

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்காற்றி வரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை, தற்போதைய கால எல்லை நிறைவடைந்த பின்னர் மீளப் பெற்றுக்கொள்வதில் இலங்கை கொண்டுள்ள ஆர்வத்தை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் பவுலா பம்பலோனி தலைமையிலான உயர்மட்டக் குழுவினரைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், இணையவழி பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் காணாமல் போனோர் அலுவலகம் உள்ளிட்ட சுயாதீன நிறுவனங்களை வலுப்படுத்துவதன் ஊடாக நல்லிணக்கத்தை முன்னெடுத்தல் போன்ற அரசின் சட்ட சீர்திருத்தங்கள் குறித்து அமைச்சர் விபரங்களை முன்வைத்தார்.

மேலும், "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான இலங்கையின் முயற்சிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இக்கட்டான காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஆதரவிற்கும் அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இருதரப்பு விவகாரங்களுக்கு அப்பால், உலகளாவிய அரசியல்-பொருளாதார மாற்றங்கள் மற்றும் பிராந்திய சவால்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை, இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்து வழங்குவதற்கான தகுதிகளை மதிப்பீடு செய்வதற்காக, ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த உயர்மட்டத் தூதுக்குழு இலங்கையை வந்துள்ளது. (அ)

# அரச வெசாக் மாத்தளையில்!

கொழும்பு, பெப். 12

2026 ஆம் ஆண்டுக்கான அரச வெசாக் நிகழ்வை மாத்தளை மாவட்டத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை சாசன ரக்ஷ சபையின் பிரதம பதிவாளர் முகுனுவெல அனுருத்த தேரர் தெரிவித்துள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே முகுனுவெல அனுருத்த தேரர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வாண்டுக்கான அரச வெசாக் நிகழ்வு மாத்தளை, கம்புருபிட்டிய, திஹகொட மிதெல்லவல விகாரையில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும், அரச வெசாக் நிகழ்வை மே மாதம் 30 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் கடந்த ஜனவரி மாதம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெஹியத்தகண்டி கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் கைது!

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில்

அம்பாறை, பெப். 12

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தெஹியத்தகண்டி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் ஆலோசகர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹியத்தகண்டி பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளர் சேவையை விட்டுச் சென்றமையால், அவரை மீண்டும் சேவையில் இணைத்து, கல்வி அமைச்சின் மூலம் தெஹியத்தகண்டி வலயக் கல்வி அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட இணைப்பை நீடித்துக் கொள்வதற்கான பணிகளைச் செய்து கொடுப்பதற்காக சந்தேக நபர்கள் 50,000 ரூபா பணத்தை இலஞ்சமாகக் கோரியுள்ளனர்.

குறித்த பணத்தை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் பேரில், நேற்று முன்தினம் பிற்பகல் தெஹியத்தகண்டி வலயக் கல்வி அலுவலகத்திற்குள்ளேயே வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை தெஹியத்தகண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அடிப்படை உயிர் காக்கும் திறன் பயிற்சி



அம்பாறை, பெப். 12

அவசர சூழ்நிலைகளில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களின் உயிர் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடன், அடிப்படை உயிர் காக்கும் திறன் பயிற்சியின் நான்காம் கட்டம் நேற்று முன் தினம் வைத்தியசாலை வளாகத்தில் வெற் றிகரமாக நடைபெற்றது.

இந்த பயிற்சி, வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எல்.எம்.ரிபாஸ் வழிகாட்டலின் கீழ் நடத்தப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார சேவை உதவியாளர்கள் இதில் பங்கேற்றனர். அவசர நிலைகளில் நோயாளிகளுக்கு உடனடி மற்றும் திறமையான சிகிச்சை வழங்கும் வகையில், உயிர்காக்கும் அடிப்படை நுட்பங்கள் செய்முறை விளக்கங்களுடன் இப்பயிற்சியில் கற்பிக்கப்பட்டன.

(அ)

# மருதமுனை, பெரிய நீலாவணை பிரதேசங்களில் டெங்கு அபாயம்

## சுற்றுச்சூழல் சோதனைகளை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுப்பு

அம்பாறை, பெப். 12

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மருதமுனை, நீலாவணை பகுதிகளில் அதிகரித்து காணப்படுகின்ற டெங்கு நோய் தாக்கத்தில் இருந்து பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்யவும் டெங்கு நோய்களின் பரவலை கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைந்த நடவடிக்கை மருதமுனை, பெரிய நீலாவணை பிரதேசத்தில் நேற்று காலை 7 மணிமுதல் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் விசேட அறிவுறுத்தலின் பேரில் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்தியர் எம்.ஐ. றிஸ்னீன் முத் வழிகாட்டலின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(அ)

# சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு புதிய நிர்வாக சபை

அம்பாரை, பெப். 12

சாய்ந்தமருது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கான பொதுக்கூட்டம் சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் ஏ.சி. முஹம்மது அஷ்ரபின் தலைமையில் பொதுச் சபை கூடி நிர்வாக சபை தெரிவு தலைவரினால் அறிவிக்கப்பட்டபோது, பொதுச்சபை அங்கத்தவர் ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் வை. அகமட் லெவ்பையினால் கீழ்வரும் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களின் பெயர் குறித்து முன்மொழிந்தபோது, அதனை பொதுச்சபை உறுப்பினர் ஒருவர் வழிமொழிய, பொதுச்சபையும் ஏக மனதாக ஏற்றுக்கொண்டது.

பொதுச்சபை கூட்டத்திற்கு கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.சி. ஜலால்டீன் கலந்து கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சங்கத்தின் புதிய தலைவராக ஆதம்பாவா அப்துல் வஸீர் தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவராக செய்னுத்தீன் அப்துல் லத்திப் தெரிவு செய்யப்பட்டதோடு, அப்துல் லத்திப் அமட் இபாஸ் அப்ஹம், அப்துல் றகுமான் அப்துல் மனாப், உதுமாலெவ்வை முகம்மது ஹனீபா, அபூபக்கர் முகம்மட் றசீட், இப்றாலெவ்வை ஹமீதா கலிலூர் றஹ்மான் பாத்திமா பர்ஹானா, முகம்மது செயின் உம்முல் பைறோஸா, ஆகியோர் சாய்ந்தமருது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபையின் ஏனைய உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

(அ)

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் தாதியர்கள் தங்குமிட விடுதி திறப்பு



அம்பாறை, பெப். 12

அம்பாறை மாவட்ட நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் மிக நீண்ட கால தேவையாக இருந்த தாதியர்களுக்கான தங்குமிட விடுதி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.பி.எம். மசூத் தலைமையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ். ஆர்.இஸ்ஸதீனால் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவுக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் வைத்தியர் எம்.சி.எம். மாஹிர் உட்பட வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து நிகழ்வை சிறப்பித்தனர்.

# நன்னீர் மீனவர் கூட்டுறவுச் சங்க வருடாந்த மாநாடு கல்முனையில்



அம்பாறை, பெப். 12

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவின் முதன்மை சங்கமான இறக்காமம் நன்னீர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபை கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் என். நிஸ்வி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எம்.சி. ஜலால்டீன், சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல். நஜீமா, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ். ஜாபீர். எஸ். ஈஸ்வானா, நீரியல்வள விரிவாக்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது நடப்பாண்டுக்கான சிறந்த நிருவாகம், திறமையான மீனவர், சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றினை பெற்ற அங்கத்தவரின் புதல்வர் மற்றும சட்டவிரோத மீன்பிடியை தடுப்பதற்காக செயற்பட்ட மீனவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# போரதீவுபற்று பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம்

மட்டக்களப்பு, பெப். 12

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுபற்று பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை பிரதேச அபிவிருத்திக் குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தலைமையில் நடைபெற்றது.

இதற்போது பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், இளையதம்பி சிறிநாத், பிரதேச செயலாளர், எஸ்.ரங்கநாதன் பிரதேச சபைத் தவிசாளர் வி.மதிமேனன் மற்றும் திணைக்களத் தலைவர்கள், உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டனர்.

இதன்போது கல்வி, நீர் வழங்கல் வடிகாலமைப்பு, சுகாதாரம், விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம், போக்குவரத்து, யானை மனித மோதல், உள்ளிட்ட பல விடையங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் பல முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன

கடந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்கள், இவ்வரும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

(அ)

# மட்டக்களப்பு வாவியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1400 லீற்றர் கோடா, 50 லீற்றர் கசிப்புடன் மூவர் கைது!



மட்டக்களப்பு, பெப். 12

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவிலங்கத்துறை களப்பு பகுதியை அண்டிய வாவியில் மறைத்து வைக்கப்பட்ட 1400 லீற்றர் கோடா மற்றும் 50 லீற்றர் கசிப்புடன் மூன்று சந்தேக நபர்களை மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

திங்கட்கிழமை மாலை ஆறு மணி முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆறு மணி வரை இச்சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஆரையம்பதியில் இருவர் மற்றும் மாவிலங்கதுறையை சேர்ந்த ஒருவருமாக சந்தேக நபர்களை கைது செய்தனர்.

1400 லீற்றர் கோடா 50 லீற்றர் கசிப்பு கோடா பரல்கள், கசிப்பு வடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கலன்களும் மீட்கப்பட்டதாக மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் பொலிசார் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தின்முன்...

வருமாறு,

நாம் அனுபவித்த துன்பங்களை நமது பிள்ளைகள் அனுபவிக்காத ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம். எந்தவொரு பிள்ளையும் போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு பலியாகாத நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

30 வருடங்களாக யுத்தத்தால்தான் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததாகக் கூறினோம். யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்களின் பின்னர் நாடு வங்குரோத்து அடைந்தது. உண்மையான காரணம் யுத்தமல்ல. நாம் பின்பற்றிய பொருளாதார கொள்கையும் மோசடிகளும் இலஞ்சம், ஊழல்களும் நாடு இந்த நிலைக்கு தள்ளப்படக் காரணமாகின. அவ்வப்போது பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு காரணங்களை கூற முயன்றோம். எமது பொருளாதார பின்னடைவுகளை பல்வேறு காரணங்கள் காட்டினோம். சிலவேளை யுத்தத்தையும் சிலவேளை இயற்கை அனர்த்தங்களையும் தொற்றுநோய்களையும் காரணம் காட்டினார்கள். வீழ்ச்சிகளுக்கு காரணம் தேடினார்கள். ஆனால், எந்த நிலைமைக்கும் தாக்குப்பிடிக்கக்கூடிய பொருளாதரத்தை உருவாக்க வேண்டும்.

கடந்த காலத்தில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் யுத்தம் வெடிக்கும் நிலை ஏற்பட்டபோது எமது நாடு வீழ்ச்சியடையும் எனக் கருதினார்கள். மத்திய கிழக்கில் யுத்த நிலை ஏற்பட்டபோது எமது நாடு வீழும் என நினைத்தார்கள். அமெரிக்கா எமது நாட்டுக்கு வரி விதித்த போது நாடு வீழ்ச்சியடையும் என்றார்கள். டித்வா புயலால் பாதிக்கப்பட்டபோது எமது நாடு சரிவடையும் என்று கருதினார்கள். அவ்வாறான எந்தவொரு நிலைமையிலும் வீழ்ச்சியடையாத பொருளாதாரத்தை உருவாக்கும் எதிர்பார்ப்புடன் நாம் பணியாற்றுகிறோம்.

உலக வங்கி அறிவித்துள்ளவாறு 410 கோடி டொலர் என கணிப்பிடப்பட்டுள்ளது. 120 இலட்சம் கோடி ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது எமது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் சுமார் 4 வீதமாகும். எமது பொருளாதாரத்துக்குப் பெரும் தாக்கம் ஏற்படாத வகையில் ஏற்பட்ட சேதத்தை தாங்கிக் கொள்ளும் வகையிலான பொருளாதாரத்தை நாம் உருவாக்கினோம்.

50 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை இந்த டித்வா சூறாவளி அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்காக ஒதுக்கினோம். அதற்காக ஒரு சதம் கூட கடன் வாங்கவில்லை. பணம் அச்சிடவில்லை. எமது திறைசேரி கணக்கில் 120 ஆயிரம் கோடி ரூபாய் இருந்தது. அதில் 50 ஆயிரம் கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கினோம். நாம் தொடர்ந்தும் பயணிக்க வேண்டும். பலமான பொருளாதாரத்தை நோக்கிய திசைக்கு செல்கிறோம்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்ற வசனத்துக்கு உயிர் கொடுக்க வேண்டும். ஒருவருக்குள்ள அதிகாரம், செல்வம் என்பவற்றால் சட்டத்தில் இருந்து தப்ப முடியும் என்ற நம்பிக்கையை கொடுக்கக்கூடாது. பணம், அதிகாரம் இருந்தால் மட்டுமின்றி நியாயமாக சட்டம் நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு எழவேண்டும். சட்டம் தன்னிடம் வர முடியாது. தன்னிடம் அதிகார வளையம் இருக்கிறது என சட்டத்தை புறக்கணிக்கும் சிலர் இருந்தார்கள். அவ்வாறான நாட்டினால் முன்னோக்கிச் செல்ல முடியாது. அனைவரும் சட்டத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் - சட்டத்துக்கு அஞ்ச வேண்டும். அந்த நிலை எமது நாட்டில் இல்லை. 2026ஆம் ஆண்டு சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்ற வசனத்துக்கு உயிர்கொடுக்கும் வருடமாக இருக்கும் என நான் உறுதியளிக்கிறேன். அனைவரும் சட்டத்துக்கு அடிபணிய வேண்டும். சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்த எந்த நாடும் முன்னேறியது கிடையாது - என்றார். (ஐ)

## குமாரபுரம்...

பல்கலைக்கழகத்திலும் மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் நினைவுகூரல் முன்னெடுக்கப்பட்டது.

1996.02.11ஆம் திகதி குமாரபுரம் கிராமத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் அப்பாவி பொதுமக்களை சுட்டும் வெட்டியும் கொன்றது. இதில், பெண்கள், சிறுவர்கள் என 26 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன், 15 வயது சிறுமி ஒருவர் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூதூர் நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெற்றது. இதன்போது, தெகிவத்தை படை முகாமிலிருந்த 8 இராணுவத்தினர் சாட்சியங்களால் அடையாளம் காட்டப்பட்டனர். அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது. பின்னர் போர்ச் சூழலை காரணம் காட்டி அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு வழக்கு மாற்றப்பட்டது. ஜூரிகள் சபை முன்பாக நடந்த வழக்கில் 2016 ஜூலை 27ஆம் திகதி குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் இறந்த இருவர் தவிர்ந்த 6 படையினரும் சகல குற்றங்களிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எங்களை...

அங்கிருந்தவர்களுடன் உரையாடினார்.

ஜனாதிபதி குறித்த தோட்டப்பகுதிக்கு வந்தபோது, அங்கு திரண்டிருந்த பெருந்திரளான தோட்டத் தொழிலாளர்கள் அவரை மிகவும் உற்சாகத்துடனும் நெகிழ்ச்சியுடனும் வரவேற்றனர்.

தமக்கான சம்பளத்தை அதிகரித்தமைக்காக இதன்போது தொழிலாளர்கள் ஜனாதிபதிக்குத் தமது நன்றிகளைத் தெரிவித்தனர்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய தொழிலாளர்கள், “எங்களது சம்பளத்தை உயர்த்தியது மட்டுமன்றி, எங்களது பிரச்னைகளை நேரில் வந்து கேட்டறிந்த ஒரே ஜனாதிபதி நீங்கள்தான். எங்களைச் சந்திக்க வந்த முதல் ஜனாதிபதி நீங்களே”, என்றும் கூறினர். (ஐ)

## அமரகீர்த்தி...

பொதுஜன பெரமுன கட்சியின் பொலநறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள, அவரின் மெய்ப்பாதுகாவலர் ஆகியோர் கூட்டத்தினரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரால் 41 பிரதிவாதிகளுக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தன. நேற்றைய தினம் தீர்ப்பு அளிக்கப்பட்டபோது 37 பேர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

3 நீதிபதிகளில் இருவர் 12 பேருக்கும் மரண தண்டனை அளித்துத் தீர்ப்பளித்தார். மற்றைய நீதிபதி 37 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இதேசமயம், நால்வருக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 21 பேர் நிரபராதிகளாகக் கருதப்பட்டு வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். (ஐ)

## 4 தேரர்கள்...

அமைக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக கரையோர பாதுகாப்புத் திணைக்களம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர், திருகோணமலை கல்யாணவங்ச திஸ்ஸ தேரர் (போதிராஜ விகாரையின் விகாராதிபதி) உள்ளிட்ட நான்கு தேரர்களும் ஆறு பொதுமக்களும் கடந்த ஜனவரி 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தால் இவர்களுக்கு பிணை வழங்க முடியாத நிலையில் சந்தேகநபர்கள் பிணைகோரி மேல் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 10 பேரையும் பிணையில் விடுவிக்க நீதிபதி என். எம். எம். அப்துல்லா உத்தரவிட்டார். தலா ஆயிரம் ரூபாய் காசு பிணையிலும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீர பிணைகளிலும் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (ஐ)

## ரயில்...

ரயிலில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவரே உயிரிழந்தார் என்று அறிய வருகிறது.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## உண்மையான...

பெரமுன கட்சி.

அமரகீர்த்தி அத்துக்கோரள படுகொலை வழக்கின் நீதிமன்றத் தீர்ப்பு குறித்து அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் விசேட அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், அமரகீர்த்தி அத்துக்கோரள எவ்வித தனிப்பட்ட காரணங்களுக்காகவும் கொல்லப்படவில்லை. அவர் கொண்டிருந்த அரசியல் கொள்கைக்காகவே வீதியில் வைத்து மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

இதேபோல், தனது கடமையைச் சரியாக நிறைவேற்றி தனது பிரபுவைப் பாதுகாக்க முயன்றதாலேயே மெய்க்காப்பாளர் கொல்லப்பட்டார். அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பானது நீதித்துறைமீதான கௌரவத்தை அதிகரித்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துக்காக தற்போது 12 இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் முடிவுக்கு வந்துள்ள போதிலும் இந்த இளைஞர்களின் மனதில் வன்முறையைத் தூண்டி அவர்களை இந்த நிலைக்குத் தள்ளிய உண்மையான குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை.

நாட்டின் ஒரு குடிமகனுக்குக்கூட தீங்கு இழைக்காத நபர்களை வீதியில் அடித்துக் கொல்லும் அளவுக்கு இளைஞர்களின் மனதில் வெறுப்பை விதைத்த தலைவர்கள், இன்று ஜனாதிபதி, அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளில் அமர்ந்திருப்பது கவலைக்குரியது - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## ஒரேயொரு...

அல்லைப்பிட்டியில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின்போது கைது செய்யப்பட்டு நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம், சுட்டுக்கொல்லப்பட்ட மற்றும் கைதான சந்தேகநபர்களுக்கு முன்னர் குற்றச்சாட்டுகள் ஏதேனும் இருந்தன என்று பொலிஸார் நீதிமன்றில் எந்த தகவலையும் குறிப்பிட்டிருக்கவில்லை.

நேற்று முன்தினம் அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரும் நேற்றைய தினம் ஊர்காவற்துறை நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

முன்னதாக அவர்களுக்கு நீதிமன்றம் விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த நிலையில், இந்தநிலையில், இருவர் சார்பிலும் முன்னிலையான சட்டத்தரணி நேற்று புதன்கிழமை நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கை மன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்து பிணை விண்ணப்பம் செய்தார். இதைத் தொடர்ந்து இருவரும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இதேவேளை, துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான வாகனத்தை வவுனியாவில் உள்ள நபர் ஒருவரிடம் இருந்து தாம் புதிதாகக் கொள்வனவு செய்ததாகவும் கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் தமக்கு சொந்தமான வயலில் நெல் அறுவடை செய்வதற்காக வேலணை பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் வேலையாட்களை ஒழுங்குபடுத்தி தருவதாகக் கூறியமையால் அவரை ஏற்றச் சென்றவேளையே சம்பவம் இடம்பெற்றதாக கைதான இருவரும் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவனின் சிறிய தந்தைதான் முன்னதாக வாகனத்தை செலுத்தினார் என்றும் தீவுப் பகுதி வீதியில் சிறுவன் தான் வாகனம் ஓட விரும்பி கேட்டபோது வாகனத்தை வழங்கியதாகவும் அந்தவேளை, அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸார் மறித்த போது வாகனத்தை நிறுத்தாது தொடர்ந்து செலுத்தினார் என்றும் தெரிவித்த உயிரிழந்தவரின் சிறிய தந்தை, அந்தவேளையில், மண்டைதீவு பொலிஸ் காவலரணில் நின்ற பொலிஸார் வாகனத்தை மறிக்க தயாராக இருந்த வேளை மீண்டும் வாகனத்தை அல்லைப்பிட்டி பக்கம் நோக்கி திருப்பிய வேளை எம்மை பின் தொடர்ந்து வந்த பொலிஸார் எமது வாகனத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினார்கள்.

ஒரே ஒரு துப்பாக்கி சூட்டு சத்தம் மாத்திரமே எமக்கு கேட்டது. அதன் போதே பெறாமகன் வீதியோரமாக வாகனத்தை நிறுத்தி மயங்கி சரிந்தார். பின்னர் பொலிஸார் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எம்மை கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விட்டனர். வாகனத்தில் இருந்த சாணம் , கயிறு, வாள், வாகனத்துக்கு விழுந்த துப்பாக்கி சூடுகள் பற்றி எவையும் எமக்கு தெரியாது - என்றும் கூறினர். (ஐ-03-05)

## மாகாணசபை...

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்கம் மக்களின் நன்மதிப்பை தற்போது இழந்து வருகிறது. இதற்கு உதாரணம்தான், இடம்பெற்றுவரும் கூட்டுறவு சங்க தேர்தல்களாகும். அண்மையில் இடம்பெற்ற குருநாகல் மாவட்ட கூட்டுறவு சங்க தேர்தல் அனைத்திலும் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. நாடு பூராகவும் இந்த நிலையே இருந்து வருகிறது. தேர்தல்களுக்கு பயப்படப்போவதில்லை என அரசாங்கம் தெரிவித்தாலும், மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு எந்த தேவையும் இல்லை.

ஏனெனில், தற்போதைய நிலையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்தினால், அரசாங்கத்துக்கு தோல்வியல்ல, படுதோல்வியே ஏற்படும் என்பதை அரசாங்கம் நன்கு தெரிந்து வைத்திருக்கிறது. அதனால் தேர்தல் வரைவை அரசாங்கம் சுருட்டிக்கொண்டிருக்கிறது. மிகவும் குறுகிய காலத்தில் மக்கள் ஆணையை இல்லாமலாக்கிக்கொண்டிருக்கும் அரசாங்கம் தற்போது ஒருசில நாடகங்களை அரங்கேற்றிக்கொண்டே முன்னுக்கு செல்கிறது. - என்றார். (ஐ)

## கொல்லப்பட்டவரின்...

இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அல்பினோ அருள்பயாஸ் என்ற 17 வயது சிறுவன் உயிரிழந்தார். இவரின் இறுதிக் கிரியைகள் இன்றைய தினம் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதேசமயம், நேற்றைய தினம் பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில் கொல்லப்பட்டவரின் வயது 19 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அவர் 2008 நவம்பர் 09ஆம் திகதியே பிறந்திருந்தார் என்றும் கூறப்படுகிறது. (03-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜனநாயகம் ஆபத்தில்!

## சந்திரிகா கவலை



கொழும்பு, பெப். 12

தற்போதைய ஆட்சியின் போக்கு "ஜனநாயகத்துக்கு ஆபத்தானது" என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் நீதித்துறை செயல்பாடுகள் குறித்து தமது முகநூல் பக்கத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணத்துக்கு நிதி ஒதுக்கிய விவகாரத்தில், அவரது செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஒரு நேர்மையான மற்றும் தொழில்முறை அதிகாரி என சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட நீதி வழங்கப்படுவது நாட்டின் நற்பெயரைக் கெடுக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தலைவர்களுக்கு நிர்வாக அனுபவம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அவர்களுக்கு அசைக்க முடியாத நேர்மை இருக்கவேண்டும்.

நாட்டின் வீழ்ச்சியைத் தடுக்கும் பொறுப்பு இறுதியில் மக்களிடமே உள்ளது.

எனவே, நீண்ட கால விளைவுகளைப் புரிந்துகொண்டு ஜனநாயகத் தெரிவுகளைச் செய்ய முன்வருமாறு நாட்டு மக்களை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார். (அ)

# குற்றச்சாட்டுக்கு உள்ளானோரே தம் மீதான குற்றத்தை விசாரிப்பது எமது நாட்டில்தான்!

## அல்லைப்பிட்டி துப்பாக்கி சூடு குறித்து கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், பெப். 12

குற்றத்துடன் தொடர்புடையவர்களே அந்த குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் நிலைமை தான் இந்த நாட்டில் காணப்படுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறி சென்ற வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரற்ற சூழலில், யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி வீதிகளில் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழலில் வாகனத்தை நிறுத்தாமல் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு அதனை நியாயப்படுத்த முடியாது.

வாகனம் ஒன்றை நிறுத்துமாறு கட்டளையிட்டு, அவர்கள் கட்டளையை மீறி சென்றால், வாகனத்தை நிறுத்த வைப்பதற்கான நடவடிக்



கையை தான் பொலிஸார் மேற்கொள்ள முடியுமே தவிர சாரதியை சுட்டு கொல்ல முடியாது.

வாகனத்தில் மாட்டின் சாணகம் இருந்ததாக பொலிஸார் காண்பித்தமையை பார்த்தவேளை, அது கொண்டு வந்து கொட்டப்பட்டது போன்றே காணப்பட்டது. அதனை உறுதிப்படுத்தும் வகையில், வாகனத்தில் இருந்து சுமார் 50 அடி தூரத்தில் பொலித்தீன் பை ஒன்றில் சாணகம் காணப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதியான விசாரணைகளை முன்னெடுப்பார்களா என்பதே சந்தேகமாக உள்ளது.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளமையால் தான் இவ்வாறான செயல்களில் பொலிஸார் ஈடுபடுகிறனர். அவசர கால சட்டம் ஊடாக பொலிஸார் இராணுவத்தினருக்கு அதிகாரங்கள் வழங்கப்படுகிறது. அதனூடாகவே கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் அவசர கால சட்டத்தின் ஊடாக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு தம்மை பாதுகாத்தனர்

ஒரு குற்றவாளியாக இருந்தாலும், பொலிஸார் சுட்டு கொள்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது. நீதியான விசாரணைகள் முன்னெடுக்கவேண்டும்.

ஆனால் எங்கள் நாட்டில் குற்றம் சாட்டப்பட்டவர்களே தம் மீதான குற்றச்சாட்டை விசாரிக்கும் துரதிஷ்ட வசமான நிலைமைகள் காணப்படுகின்றன. குற்றம் செய்ததாக கூறப்படும் பொலிஸாரே இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்-என்றார். (அ)

# சபாநாயகருக்கு எதிரான விசாரணையில் அவரது தனிப்பட்ட செயலாளர் இடையூறு

## இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, பெப். 12

சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அவரது தனிப்பட்ட செயலாளர் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டி, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளது.

சபாநாயகருக்கு எதிராக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பான விடயங்கள் அடங்கிய அறிக்கையைச் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்குமாறு, பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்குச் சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளர் அறிவித்துள்ளமை விசாரணைகளுக்குத் தடையாக இருப்பதாக அம்முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள சமிந்த குலரத்ன என்பவரால், கடந்த 2 ஆம் திகதி சபாநாயகருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் தகவல்களைக் கோரி சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிய கடிதம் குறித்து, கடந்த பெப்ரவரி 05 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா பாராளுமன்றில் அம்பலப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து, குறித்த கடிதம் மூலம் விசாரணைகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாகத் தெரிவித்தே, ஹர்ஷன ராஜகருணா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நேற்று காலை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாட்டை அளித்துள்ளனர். (அ)

# ஜெனீவா கூட்டத்தொடருக்கு முன் புதிய பயங்கரவாத சட்டம் வராது!

## நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார



கொழும்பு, பெப். 12

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61 ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக, இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான புதிய சட்டம் கொண்டுவரப்படாது என நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

அதன்படி, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான பொதுமக்கள் கருத்துக்கள் தற்போது கோரப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் கூறினார்.

இதற்கான கால அவகாசம் எதிர்வரும் 29 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, பொதுமக்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டு, உத்தேச சட்டமூலத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு கால அவகாசம் தேவைப்படும் எனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், எதிர்வரும் 23 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது, இலங்கையின் முன்னேற்றங்கள் தொடர்பான அறிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பிலும் முன்வைப்புகள் எதிர்பார்க்கப்படும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# 6 மாத கால அவகாசம் தருகிறோம் முடிந்தால் தேர்தலை நடத்துங்கள்!

## அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சவால்

கொழும்பு, பெப். 12

"அநுர அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. அவர்கள் நினைத்தால் அடுத்த வாரமே பாராளுமன்றத்தில் பிரேரணையை நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும். அரசுக்கு ஆறு மாத கால அவகாசம் வழங்குகின்றோம், முடிந்தால் தேர்தலை நடத்துங்கள்."

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க சவால் விடுத்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அவர், அரசின் தற்போதைய செயற்பாடுகள் குறித்துக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. அரசின் இயலாமையும் பலவீனமும் நாளுக்கு நாள் வெளிப்பட்டு வருகின்றன. ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்திலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும், சகல கூட்டுறவுத் தேர்தல்களிலும் அரசு தோல்வியைத் தழுவியுள்ளது. இதன் மூலம் மக்கள் அரசின் மீது கொண்டுள்ள வெறுப்பு தெளிவாகப் புலனாகின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு ஆறு மாத கால அவகாசத்தை வழங்குகின்றோம். அரசிடம் தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருப்பதால், வரும் வாரமே ஒரு பிரேரணையை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்து சட்டச் சிக்கல்களை நீக்கித் தேர்தலை நடத்த முடியும். ஆனால், தேர்தலைச் சந்திக்க அரசுக்குத் துணிவில்லை.

இந்த அரசால் நாட்டைச் சரியான முறையில் நிர்வகிக்க முடியாது என்பது உறுதியாகிவிட்டது. எம்மிடம் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த தரப்பினர் உள்ளனர். அதிகாரத்தை எம்மிடம் ஒப்படைத்தால் நாட்டைச் சிறந்த முறையில் கட்டியெழுப்புவோம். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால், அதில் ஐக்கிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெறுவது உறுதி-என்றார். (அ)

# கொழும்பு-அகமதாபாத் இடையே விரைவில் நேரடி விமான சேவை!

கொழும்பு, பெப். 12

இலங்கையின் கொழும்புக்கும் இந்தியாவின் அகமதாபாத்துக்கும் இடையே நேரடி விமான சேவைகளைத் தொடங்குவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் சிறீலங்கன் எயார் லைன்ஸ் மூலம் அகமதாபாத்துக்கு நேரடி விமான சேவைகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்தார்.

இதன் மூலம், இலங்கையில் உள்ள பக்தர்கள் குஜராத்துக்குச் சென்று மத யாத்திரை நடவடிக்கைகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் கூறினார். (அ)

# அதிகூடிய இஸட் புள்ளி பெறும் மாணவருக்கு வெளிநாட்டுப் பல்கலைகளில் பட்டப்படிப்பு

கொழும்பு, பெப். 12

கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய இஸட் புள்ளி பெற்று சித்தியடையும் மாணவர்களுக்கு, உலகப் புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அவர்கள் விரும்பும் துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான புதிய கல்வி உதவித்தொகைத் திட்டத்தை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், மொத்தம் 200 மாணவர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி பிரதி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.